பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 07 2024 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ள உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

2. விமான போக்குவரத்து சேவைக்கான மென்பொருள் பாதிப்புகள் விரைவில் சீரடையும் என்று மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. இயற்கை விவசாயத்தின் நன்மைகளை கருதி, விவசாயிகள் அதனை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. தமிழகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக கடந்த பத்தாண்டுகளில் 11 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

5. ஆசியக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் முதலில் பேட் செய்து வருகிறது.

- இனி விரிவான செய்திகள்----

<<<<<<>>>>>

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நான்காவது சர்வதேச பருவநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் நிறைவுரையாற்றிய அவர் இதனை தெரிவித்தார்.

பருவநிலை மாற்றத்திற்கு எதிரான நடவடிக்கையில் மறு பயன்பாடு, மறு சுழற்சி மற்றும் குறைவான உபயோகம் என்ற திட்டத்தை தாரக மந்திரமாக கொண்டு செயல்பட வேண்டும் என்று உலக நாடுகளை அவர் கேட்டுக்கொண்டார்.

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் இந்தியா முன்னணி நாடுகளில் ஒன்றாக திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் நாட்டின் மொத்த மின் உற்பத்தியில் 50 சதவீதத்தை புதுப்பிக்கத்தக்க எரிசக்தியிலிருந்து உற்பத்தி செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பருவநிலை மாற்றத்தால் கடல் மட்டம் உயர்வு, நீடித்த வறட்சி, வனப்பகுதியில் ஏற்படும் தீ விபத்துகள், எதிர்பாராமல் ஏற்படும் சூறாவளி போன்ற பாதிப்புகள் ஏற்படுவதையும் திரு ஜெக்தீப் தங்கர் சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>

விமான போக்குவரத்துக்கான மைக்ரோசாஃப்ட் மென்பொருள் சேவை பாதிப்பால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பில் இருப்பதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்த பாதிப்பு குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாதிப்புகளை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் மென்பொருள் சேவை சீராகும் என்றும் கூறினார்.

தேசிய தகவல் மையத்தின் சேவைகள் எதுவும் பாதிக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக, விமான போக்குவரத்துக்கான **Crowdstrike** மென்பொருள் சேவை பாதிக்கப்பட்டதால், தமிழகத்தின் சென்னை உட்பட உலகம் முழுவதிலும் விமான போக்குவரத்து சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்திய நேரப்படி இன்று நண்பகல் 12 மணிமுதல், இந்த பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும், இதன் காரணமாக நாட்டில் உள்ள முக்கிய விமான நிலையங்களிலிருந்து, விமானங்கள் புறப்படுவதும், தரையிறங்குவதும் பாதிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் 170 விமானங்களின் சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சென்னை விமான நிலையத்தில் இன்று மாலை ஆறு மணிக்குமேல் புறப்பட வேண்டிய 12-க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதேபோல், தில்லி, மும்பை, கொல்கத்தா, பெங்களூரு உள்ளிட்ட நகரங்களில் உள்ள விமான நிலையங்களிலிருந்து புறப்படும் விமானங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன

<<<<<<>>>>>

விவசாயத்தில் ரசாயன உரங்களை பயன்படுத்தாமல் உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்

லக்னோவில் இன்று இயற்கை விவசாயம் குறித்த நிகழ்ச்சியில் பேசிய அவர், நாடு தழுவிய அளவில் இயற்கை விவசாயம் தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரத்தை மத்திய அரசு தொடங்க இருப்பதாக கூறினார்.

விவசாயிகள் இயற்கை விவசாயத்தை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இயற்கை விவசாயத்தை தொடங்கும்போது முதல் இரண்டு ஆண்டுகள் உற்பத்தி குறைவாக இருக்கும் என்பதால், மூன்றாண்டுகள் வரை மத்திய அரசு மானியம் வழங்கும் என்று அவர் தெரிவித்தார்.

இயற்கை விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன், அவர்களின் விளை பொருட்களுக்கு கூடுதல் விலை கிடைக்க தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருவதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்திற்கு கடந்த பத்தாண்டுகளில் உள்கட்டமைப்பு திட்டங்களுக்காக மத்திய அரசு 11 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

மேட்டுப்பாளையம் - தூத்துக்குடி இடையே வாரம் இருமுறை விரைவு ரயில் சேவையை இன்று மேட்டுப்பாளையத்தில் கொடியசைத்து தொடங்கி வைத்து அவர் பேசினார்.

தமிழகத்தில் ரயில், நெடுஞ்சாலைகள் மற்றும் விமான போக்குவரத்துக்காக இந்த தொகை ஒதுக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

*(வாய்ஸ் பைட் - எல். முருகன் - 40 செகண்ட்ஸ்)*

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ், தமிழகத்திற்கு 8 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு ரயில் நிலைய மேம்பாட்டுப்பணிகள் நடைபெற்று வருவதாகவும் திரு எல். முருகன் கூறினார்.

<<<<<<>>>>>

சிறந்த சேவையாற்றிய பாதுகாப்புப் படையினருக்கு விருது வழங்கும் இரண்டாவது நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்று விருதுகளை வழங்கினார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற விழாவில், பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், தில்லி துணை நிலை ஆளுநர் திரு வினய்குமார் சக்சேனா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>

கடன் மற்றும் வைப்புத் தொகைக்கு இடையேயான இடைவெளியை வங்கிகள் கண்காணிக்க வேண்டும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்திகாந்த தாஸ் வலியுறுத்தியுள்ளார்.

மும்பையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கடனுக்கும், டெபாசிட் தொகை வளர்ச்சிக்கும் இடையே ஏற்படும் பாதிப்பு காரணமாக வங்கிகளின் கட்டமைப்பு வெளிப்படும் என்று எச்சரித்தார்.

யுபிஐ உள்ளிட்ட டிஜிட்டல் முறையிலான நிதி சேவை முறைகளை ரிசர்வ் வங்கி தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருவதையும் திரு சக்திகாந்த தாஸ் சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>

பாதுகாப்புத்துறையில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப புரட்சி காரணமாக விமானப்படையினரின் பொறுப்பு அதிகரித்திருப்பதாக விமானப்படை துணைத்தளபதி ஏர்மார்ஷல் அமர் பிரீத் சிங் தெரிவித்துள்ளார்.

தில்லியில், விமானங்கள் மற்றும் ஏவுகணைகள் குறித்த கண்காட்சி மற்றும் கருத்தரங்கை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

விமானப்படையை பொறுத்தவரை பல்வேறு தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப தயார்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம் என்று அவர் கூறினார்.

பாதுகாப்புத்துறையில், தொலைத்தொடர்பு மற்றும் தகவல் துறை முக்கிய பங்கு வகிப்பதாகவும், இத்துறையில் இந்தியா தன்னிறைவை எட்டுவதற்கு ஏதுவான வகையில் பல்வேறு தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருவதாகவும் ஏர்மார்ஷல் அமர் பிரீத் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மகாராஷ்ட்ர மாநில சட்டப்பேரவைத் தேர்தலை கூட்டணி கட்சிகளுடன் இணைந்து எதிர்கொள்ள பிஜேபி முடிவு செய்துள்ளது.

மும்பையில் மகாராஷ்ட்ர மாநில பிஜேபி பொறுப்பாளர்களான திரு பூபேந்தர் யாதவ், திரு அஷ்வினி வைஷ்ணவ் ஆகியோர் அக்கட்சியின் மாநில நிர்வாகிகளுடன் நடத்திய ஆலோசனைக்கு பிறகு இதனை தெரிவித்தனர்.

எதிர்வரும் மகாராஷ்ட்ரா சட்டப்பேரவைத் தேர்தலில் கூட்டணி கட்சிகளுக்கான தொகுதி பங்கீடு எந்தெந்த கட்சிகளுடன் கூட்டணி என்பது குறித்து அவர்கள் விரிவான ஆலோசனை நடத்தினர்.

<<<<<<>>>>>

ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு காலணி வடிவமைப்பு குறித்த ஆறுமாத கால பயிற்சி, தமிழகத்தின் சென்னையில் உள்ள தொழில்நுட்ப மேம்பாட்டு மையத்தில் இலவசமாக வழங்கப்படும் என்று மத்திய காலணி பயிற்சி நிறுவனத்தின் இயக்குனர் திரு முரளி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், உரிய ஆவணங்களுடன் மாணவர்கள் பயிற்சி நிறுவனத்திற்கு நேரில் வர வேண்டும் என்று கூறினார்.

*(வாய்ஸ் பைட் - முரளி – 20 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசியக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற பாகிஸ்தான் அணி பேட்டிங்கை தேர்வு செய்துள்ளது.

தம்புல்லாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், அந்த அணி சற்றுமுன்வரை 5 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 26 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக, நடைபெற்ற மற்றொரு போட்டியில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை, நேபாள அணி ஆறு விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

<<<<<<>>>>>

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் விஷ்ணு வர்தன் - அடில் கல்யாண் இணை இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில், 6-3, 7-6 என்ற செட் கணக்கில், நியூசிலாந்தின் ஜேம்ஸ் வாட் - அஜித் ராய் இணையை வென்றது.

இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் விஷ்ணு வர்தன் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சஹாஜா எமலப்பள்ளி - ஜப்பானின் **Hiroko Kuwata** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<END>>>>>**